# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 05 கணை: 35 ஏப்ரல் – 2025






Since : 2020 May 18


சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**

**கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்**

**இணை ஆசிரியர்கள்**

**திரு. ம.நிரேஸ்குமார்**

**திரு. நா.அம்பிகைபாகன்**

**திரு. ஞா.கயூரன்**

**வெளியீடு**

**குருசேத்திரம் வெளியீடு, யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு**

**guruseththiram@gmail.com**


குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

# உள்ளே...


| | |
|---|---|
| காட்சியும் கருத்தும் | 1 |
| ஆசிரியர் பார்வையில்... | 2 |
| INNER PEACE | 3 |
| ஆய்வு - இடைவெளிகள் | 5 |
| மனிதம் | 8 |
| சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும் | 9 |
| “இன்பா”வின் சிந்தனைத் தொடர் - 26 | 12 |
| தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சர்வதேச புரிந்துணர்வுக்கும் குடியியல் கல்வியின் அவசியம் | 13 |
| மலையகத்தானின் கவிதை | 15 |
| முயற்சிப்போம் வெல்வோம் | 16 |
| விடாமுயற்சி | 17 |
| தனிமையின் இனிமை | 20 |
| தியானம் | 21 |
| மானிடா | 22 |
| யாழ் சிட்டுக்களின் ஆசிரியையாய் ஒரு நாள் | 23 |
| எது செல்வம்? | 24 |
| எமது பிறப்பு சம்பவமாகவும் இறப்பு சரித்திரமாகவும் மாற்றப்படல் வேண்டும் | 25 |
| சுனிதா வில்லியம்ஸ் | 26 |
| கதை வழி அற மொழி | 27 |
| பேசும் படங்கள் | 28 |

# காட்சியும் கருத்தும்


கலாநிதி சு.பரமானந்தம்

**சமகால செய்திகள்:**












# ஆசிரியர் பார்வையில்...

குருசேத்திரம் இதழ் 35 இற்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழர் கல்விப் பாரம்பரியத்தின், கலாசாரத்தின், மனித நடத்தைக்கோலங்களின் போக்கு பற்றிய சுயவிழிப்புணர்வு, திறந்த கருத்தாடல்கள் தேவையாக இருக்கின்றது. கல்விப்புலத்திலும் ஏனைய அரச நிறுவனங்களிலும் நிர்வாகம் தொடர்பான விமர்சனங்கள் அதிகரித்து வருவதையே காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான தகவல்கள் எமது இருப்பை, தனித்துவத்தை கீழ்நிலைக்கு தள்ளப்படுவதை உணரக்கூடியதாகவுள்ளது. ஒருவர் தனது கடமைகளுக்கு அப்பால் அடுத்தவர் மீதான சாட்டுதல்களை மேற்கொள்வது அதிகரித்தவண்ணமுள்ளது. கல்வித்துறையிலும் நிர்வாகத்துறையிலும், அதிக ஆற்றல்களை வெளிப்படுத்திய தமிழர் தரப்பினரின் செயற்பாடுகள் பற்றிய சமூக ஊடகங்களில் எதிர்மறையாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவை உண்மையா? பொய்யா என்பதற்கு அப்பால் இவ்வாறான கருத்தேற்றங்கள் வராமல் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தவறுகள் காணப்பட்டால் அதனை திருத்தவதற்கு முனைய வேண்டும். எமது "பயனாளிகள் யார்" என்பதை சரியாகப் புரிந்துகொண்டு ஒவ்வொருவரும் வெளிப்படைத் தன்மையுடன் அணியாக செயற்படுவோமாக இருந்தால் தேவையற்ற விமர்சனங்களை தவிர்த்துக்கொள்ளலாம். சரியான விடயங்களைச் சரியான நேரத்தில் செய்வதற்கு (Do the right things in right time) யாருமே தடையாக இருக்கப்போவதில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், வசீகர வலுவாண்மையை அதிகரிப்பதற்கான அடித்தளமாகக் கொண்டு செயற்பட வேண்டுமே தவிர, அதிகாரங்கள் அடுத்தவருக்கு தண்டணை வழங்குவதற்கானது, அல்லது தான் என்ற அகங்காரத்தை வளர்ப்பதற்கு அல்ல என்பதை மனதிலிருத்திக்கொள்ளுதல் அவசியம்.

யுத்தத்திற்குப் பின்பான கல்வி தொடர்பான செயற்பாடுகளில் காணப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் நல்ல விடயங்கள், அல்லது சிறப்பாக செயலாற்றும் இளம் தலைமைகளின் செயற்பாடுகள் இதனால் மழுங்கடிக்கப்படக் கூடிய நிலமை காணப்படுகின்றது. அவ்வாறான பல இளம் ஆளுமைகள் இன்று எமது பிரதேசங்களில் சேவைசெய்து வருகின்றார்கள். இவர்களது அர்ப்பணிப்பான சேவை வெளிக்கொணரப்படல் அல்லது பாராட்டப்படல் வேண்டும். மாற்றத்திற்கான சிறந்த கருவியாக கருதப்படும் கல்வியின் அணுகுமுறைகள் பாலர் கல்வியியல் இருந்து பல்கலைக்கழக கல்வி வரை கல்வியின் உண்மையான பண்புகளை உணர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும். அறிவதற்காகக் கற்றல், (Learning to Know) ஆற்றுவதற்காக கற்றல் (Learning to Do), சேர்ந்துவாழ்வதற்காகக் கற்றல் (Learning to live together) ஆவதற்காக கற்றல் (Learning to be), ஆகிய நான்கு கல்வியின் முக்கிய விடயங்கள் நவீன வாழ்க்கைக் கோலங்களின்

பிரச்சினைகளை மாணவர்கள் கடந்து செல்ல அவசியமான முழுமையான வளர்ச்சிக்கான அணுகுமுறையை வலியுறுத்து கின்றன.

ஒரு முழுமையான அணுகுமுறையாக கற்றல்-கற்பித்தல் என்பது, அறிவாற்றல் கையகப்படுத்துதலில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஒரு மாணவரின் அல்லது நபரின் மனம், உடல், மனவெழுச்சிகள், மனப்பாங்கு, சமூக சூழலை உள்ளடக்கிய ஆன்மீக நுண்மதி போன்ற சகல திறன்களையும் மென்திறன் களையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டுமென்பதை என்பதை வலியுறுத்துகிறது. இது ஒரு தனிநபரின் அனுபவங்கள் மற்றும் திறன்களின் அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொள்கிறது. சிந்தனை, மனவெழுச்சி மற்றும் நடத்தை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பல பரிமாண செயல்முறையாக கற்றலை செயற்படுத்துவது அவசியமாகின்றது. கற்றல் கற்பித்தலுக்கான முழுமையான அணுகுமுறை, எதிர்கால மாணவ சமூகத்தினரை வெற்றிபெற்ற சமூக உறுப்பினராக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோரினதும் பொறுப்பாகும் என்பதை மனதிலிருத்தி செயற்படுவோம்.

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்களைப் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

என்றும் அன்புடன்,
சு.பரமானந்தம்.
**PhD in Education**

# Inner Peace

- Nekesan Paramanantham –



In a village nestled between rolling hills and clear rivers, there lived a man known for his wisdom. He was neither rich nor poor, but his mind was sharp, and his heart calm.

One full moon night, a wealthy, middle-aged man arrived at the wise man's door. His clothes were fine, his eyes weary, and his steps heavy with unspoken burdens.

The wise man welcomed him into his humble home, offering tea and a quiet place to sit. After a moment, the visitor spoke, his voice tinged with frustration.

“I have a lot of money. I’ve bought everything that the world tells me I need. I own lands, jewels, fine art, and more. I can purchase nearly anything, yet I still feel... empty. My mind is restless, and my heart is unsettled. I cannot find peace in all of this. What should I do?”

The wise man listened quietly, then said, “I will answer your question more clearly. But before that, can you help me with something?”

“Of course,” the visitor replied, eager to repay the wise man’s kindness.

“I’ve lost my ring,” the wise man said calmly. “A small copper one. It’s not worth much, but it means a great deal to me. I think I may have dropped it in the yard earlier this evening. Would you mind helping me look for it?”

The visitor nodded. “Of course.”

The wise man brought him outside the house, and both began searching for the ring by the light of the moon. The silver glow washed over the ground, casting soft shadows across the stones, plants, and path. The air was cool and quiet, broken only by the sound of crickets and the rustle of leaves.

They searched near the well, under a tree, and along the edge of the garden.

After a few minutes, the visitor paused. “Are you sure you lost it out here?”

The wise man pointed back toward the house. “No. I lost it inside, near the fireplace.”

The visitor looked confused. “Then... why are we looking out here?”

The wise man smiled gently. “Because it’s brighter out here.”

The visitor frowned. “That doesn’t make sense. If you lost it inside, shouldn’t we be looking there, even if it’s dark?”

The wise man nodded slowly. “Exactly.”


A moment passed. And then, slowly, the visitor understood.

The wise man looked at him kindly and said,

**“Peace is not out there. It’s just inside you. And you have to search for it within yourself - not in the outside world, not through money or possessions.”**

# ஆய்வு – இடைவெளிகள்
# (Research Gaps)

- கலாநிதி சு.பரமானந்தம் -




## அறிவு-இடைவெளி (Knowledge Gap)

ஆய்வு இடைவெளி என்பது உங்கள் துறையில் உள்ள எந்தவொரு ஆய்வுகளாலும் பதிலளிக்கப்படாத ஒரு ஆய்வுவினா அல்லது பிரச்சனையாகும். சிலவேளைகளில் ஆய்வு செய்யப் படாத ஒரு கருத்து அல்லது புதிய யோசனை இருக்கும்போது ஒரு ஆய்வு இடைவெளி இருக்கும். சில நேரங்களில் இருக்கும் அனைத்து ஆய்வுகளும் காலாவதியானவை மற்றும் புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட ஆய்வு தேவைப்பட்டால் நீங்கள் அது பற்றிய (உதாரணமாக 2001 இல் இணையப் பயன்பாடு குறித்த ஆய்வுகள்) ஒரு ஆய்வு இடைவெளியைக் காண்பீர்கள். அல்லது, ஒருவேளை ஒரு குறிப்பிட்ட ஆய்வுக் குடித்தொகை நன்கு ஆய்வு செய்யப்படாவிட்டாலும் அங்கு ஆய்வு இடைவெளியை இனங் காணலாம். (ஒருவேளை பதின்மவயதினர் மற்றும் வீடியோ கேம்கள் குறித்து ஏராளமான ஆய்வுகள் இருக்கலாம், ஆனால் குழந்தைகள் மற்றும் வீடியோ கேம்கள் குறித்து போதுமான ஆய்வுகள் இல்லை).

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஆய்வுசெய்யப் படாத அல்லது போதுமான ஆதாரங்கள் இல்லாத இடை வெளிகளை நிவர்த்தி செய்ய புதிய ஆய்வுக்கு வழிவகுக்கின்றது. ஆய்வு இடைவெளிகளை அடையாளம் காண்பது கல்வி மற்றும் அறிவு முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானது - இது உண்மை நிலமைகளை விளக்குவதற்கும், நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உதவுகின்றது.

கல்வி ஆய்வுப் புலத்தில், பல்வேறுவிதமான ஆய்வு இடை வெளிகள் காணப்படுகின்றது. குறிப்பாக அறிவு-இடைவெளி என்பது கல்வித் துறையில் ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது விடயம் பற்றிய முரண்நிலை அல்லது தகுந்த விளக்கம் இல்லாததைக் குறிக்கும்

**அறிவு இடைவெளிகளை அடையாளம் காணுதல்:**

LinkedIn இன் படி, அறிவு-இடைவெளிகளை அடையாளம் காண்பது என்பது ஏற்கனவே உள்ள சார்பிலக்கியங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு மதிப்பீடு செய்தல், ஆய்வு செய்யப்படாத பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும்

பதிலளிக்கப்படாத ஆய்வுவினாக்களை இனங்காணல் போன்ற வற்றை உள்ளடக்கியது.

ஒரு குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறையின் செயல்திறன் குறித்த ஆய்வு குறைவாகக் காணப்படுகின்றமை அல்லது ஒரு குறிப்பிட்ட கல்விக் கொள்கை யின்படி மாணவரின் கற்றல் பேறுகளில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து, முழுமையற்ற விளக்கம் காணப்படல்.

ஆய்வுச் செயற்பாடுகளில் அறிவு-இடைவெளி (Knowledge Gap) என்பது, ஏற்கனவே உள்ள ஆய்வில், ஆய்வு வினாக் களுக்கு போதுமான அளவு பதிலளிக்காத, போதுமான ஆழம் இல்லாத, அல்லது முடிவில்லாத அல்லது முரண்பாடான கண்டுபிடிப்புகளை வழங்கும் பகுதிகளைக் குறிக்கிறது. கல்வியில், கற்பித்தல், கற்றல் அல்லது கல்விக்கொள்கையின் முக்கியமான அம்சங்கள் போன்ற விடயங்களில் போதுமான அளவு ஆய்வுக் குட்படுத்தாத சந்தர்பங்களில் அறிவு-இடைவெளி ஏற்படுகின்றது. இந்த இடைவெளிகள் கல்வி நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் கற்றல் பேறுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை இல்லாது செய்ய வழிவகுக்கலாம்.

**கல்விப்புல ஆய்வுகளில் அறிவு-இடைவெளிகளுக்கான உதாரணங்கள்:**

1. *நிலைபேண்தகு விருத்தியில் முன்-பிள்ளைப் பருவக் கல்விச் செயற்பாடுகளின் தாக்கம்:*

அறிவு-இடைவெளி: முன்பிள்ளைப்பருவ கல்வியின் (Early Childhood Education-ECE) குறுகிய கால நன்மைகள் குறித்து குறிப்பிடத்தக்க ஆய்வுகள் இருந்தாலும், தலையீடுகளில், நீண்டகால கல்வி மற்றும் சமூக-பொருளாதார தாக்கங்கள் குறித்த சான்றுகள் குறைவாகக் காணப்படுகின்றன.

முன்-பிள்ளைப் பருவக்கல்வி மீதான தலையீடுகள் நீண்ட கால வெற்றியை விளைவிக்கின்றனவா என்பதைப் புரிந்து கொள்வது, முன்-பிள்ளைப் பருவக் கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கான கொள்கை வகுப்பாளர்கள், கல்வியியலா ளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அவசியமாகும். (Camilli et al., 2010).

2. *இடைநிலை வகுப்புகளில் மாணவர் ஈடுபாட்டில் தொழில் நுட்பக் கருவிகளின் ஒருங்கிணைப்பு*

அறிவு-இடைவெளி: வகுப்பறைகளில் தொழில்நுட்ப ஒருங்கி ணைப்பு பரவலாக இருந்தாலும், மாணவர் ஈடுபாட்டில், குறிப்பாக இடைநிலைப் பாடசாலைகளில் அதன் குறிப்பிட்ட தாக்கம் குறித்த ஆய்வுகள் இன்னும் குறைவாகவே காணப்படுகின்றது.

எண்மியக் கருவிகள் கற்பித்தல்-கற்றலில் முக்கிய பங்கு வகிப்பதால் தொழில்நுட்பம், மாணவர் ஈடுபாட்டை எவ்வாறு மாற்றியமைக்கிறது என்றும் அது விளைதிறனான கற்றல் பேறுகளுக்கு வழிவகுக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கும் மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகிறது (Cheung & Slavin, 2013).

3. *தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் (Personalized Learning) அணுகுமுறைகளின் விளைதிறன்:*

அறிவு-இடைவெளி: 21ஆம் நூற்றாண்டின் கல்விப் போக்கு களில், தனிப்பயனாக்கப்பட்ட கற்றலில் ஆர்வம் அதிகரித்து வந்தாலும், வெவ்வேறு தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அணுகு முறைகள் (உதாரணமாக தகவமைப்பு கற்றல் மென்பொருள் vs.

தனிப்பயனாக்கப்பட்ட ஆசிரியர்-மாணவர் தொடர்பு) விளைதிறன் அடிப்படையில் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன என்பதை ஆராயும் விரிவான ஆய்வுகள் குறைவாக உள்ளது.

பாடசாலைகளில் தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் செயற்பாடுகள் அதிகளவில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. எனினும் ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எவ்வாறான உத்திகள் அல்லது செயலுபாயங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதற்கான சான்றுகள் தேவை (Walkington, 2013).

4. *வீட்டுச் சூழமைவில் எண்மிய கற்றலை ஊக்குவிப்பதில் பெற்றோரின் வகிபாகம்:*

அறிவு-இடைவெளி: பாரம்பரிய கல்வியில் பெற்றோரின் ஈடுபாடு நன்கு ஆவணப்படுத்தப்பட்டிருந்தாலும், எண்மிய கற்றலை ஊக்குவிப்பதில் பெற்றோர்களின் வகிபாகம் குறித்து (ஊம்: நிகழ்நிலைப் பாடசாலைகள் அல்லது ந-கற்றலின் போது) குறைவாகவே ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது.

எண்மிய கற்றலின் வளர்ச்சியுடன், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நிகழ்நிலைக் கல்விக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதைப் புரிந்துகொள்வது, கற்றல் பேறுகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் குறிப்பாக ஆரம்ப, இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு (Kitsantas et al., 2016) மிக முக்கியமானது.

5. *பல்வகைமைகொண்ட வகுப்பறைகளில் கலாசார ரீதியாக கற்பித்தலின் விளைதிறன்.*

அறிவு-இடைவெளி: கலாசார ரீதியாக பதிலளிக்கக்கூடிய கற்பித்தல் அணுகுமுறைகள் (CRT- Culturally Responsive Teaching) கவனத்தை ஈர்த்து வரும் நிலையில், பல்வேறு கல்வி நிவனங்களில் CRT ஐ செயல்படுத்துவதற்கான மிகவும் பயனுள்ள உத்திகள் மாணவர் கற்றலில் அதன் நேரடி தாக்கம் குறித்த போதுமான ஆய்வுகள் இல்லை.

வகுப்பறைகளில் பல்வகைமைகொண்ட மாணவர்கள் கற்கும் போது CRT செயற்பாடுகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பான விளக்கம், வெவ்வேறு கலாசார பின்னணியைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் பேறுகளை மேம்படுத்த உதவும் (Gay, 2018).

> *கலாசார அம்சங்களுக்கேற்ற கற்பித்தலியல் Culturally Responsive Teaching: மாணவர்களிடம் கலாசார "அறிவு-மூலங்கள்" இயல்பாகவே காணப்படுகின்றன, அதாவது, தனிப்பட்ட செயல்பாடு மற்றும் நிஜவாழ்வுக்கான அறிவு மற்றும் திறன்களின் தொகுப்புகள் காணப்படுகின்றன. கலாசார முறைக்கு ஏற்ற கற்பித்தல் என்பது, மாணவர்கள் வகுப்பறையில் வெளிப்படுத்தும் கலாசார அறிவு மற்றும் திறன்களின் சிறப்பை அங்கீகரித்து மதிப்பிடப்படுகிறது. இது பல அகக்காட்சி மற்றும் அறிவாற்றல் திறன்களை வளர்ப்பதற்கான ஒரு வளமாக கருதப்படுகிறது. இதன் பொருள், மாணவர்கள் அறிந்தவற்றையும், அவர்கள் அதை எப்படி அறிந்திருக்கிறார்கள் என்பதையும், மாணவர்களின் கலாசார அறிவு, வாழ்க்கை அனுபவங்கள், உதாரணங்கள், தொடர்பாடல் பாணிகள் மற்றும் மொழி ஆகியவற்றின் மூலம் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை பாடங்களுடன் ஒருங்கிணைப்பதாகும்.*

*6. மாணவர் நடத்தையில் பாடசாலைச் சட்டம்-சம்பிரதாய கொள்கைகளின் நீண்டகால தாக்கங்கள்*

அறிவு-இடைவெளி: பல்வேறு பாடசாலைச் சட்டம்-சம்பிரதாய கொள்கைகளின் நீண்டகால விளைவுகள், குறிப்பாக ஒழுங்கு விதிகள், சீர்திருத்த தண்டனை போன்ற மாற்று ஒழுக்க நடைமுறைகள், மாணவர் நடத்தைகள் போன்றவை கல்வி அடைவில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து மேலதிக ஆய்வு தேவை.

பாடசாலைகளின் சட்டம்-சம்பிரதாய கொள்கைகளின் தாக்கம் குறித்த ஆய்வு, ஒழுக்கமீறல் செயற்பாடுகளைக் குறைத்து மாணவர் நடத்தை மற்றும் வெற்றியை மேம்படுத்தும் உத்திகளைப் பின்பற்றுவதில் பாடசாலைகளுக்கு வழிகாட்டுதல் (Steiner & Hemphill, 2008).

கல்வி ஆய்வுகளில், "அறிவு-இடைவெளி"" என்பது ஒரு விளக்கம் இல்லாத பகுதியை அல்லது ஏற்கனவே உள்ள அறிவு போதுமானதாக இல்லாத விடயத்தை அல்லது முடிவற்ற ஒரு பகுதியைக் குறிக்கிறது. இது வெற்றிடத்தை நிரப்ப மேலும் ஆய்வுகள் தேவைப்படுவதைத் குறித்துநிற்கின்றது. இவ்வாறான நிலமைகளில் ஆசிரியர் ஒருவர் தான் சார்ந்த கல்விப்புலத்தில் பல்வேறு விதமான சவால்களைச் சந்திக்க நேரிடுகின்றது. இவ்வாறான நிலமைகளில் குறித்த விடயங்களில் மாற்றம் அல்லது விருத்தி தேவைப்படும் போது அதற்கான சார்பிலக்கியங்களில் இருந்தும், ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளில் இருந்தும், ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் ஆய்வு இடைவெளிகளை இனங்காண முடியும்.

# மனிதம்



பட்டினி பல கிடந்தும்
பரிதாபம் இன்று இல்லை
பணம் என்ற வான் குருவி
சிறகடித்து பறக்கும் மட்டும்.

எட்ட நின்று பார்போனும்
எளிதானான் எண்ணத்தில்
பல்லாக்கில் செல்பவனோ !
பலிக்கின்றான் பசிப்போனை

பித்து பிடித்த மானிடனே!
பிதற்றுகின்றாய் உன் வாழ்வில்
தொட்டு செல்லும் உடமைகளும் விட்டு செல்லும்
விதி விளையாட்டில்

கொட்டி தீர்க்க வழி தேடி
தெற்குத்திசை நீ தேட
வட்டமிடும் பருந்துகளும்.
வறுமை அவன் பிணம் தானே!

***பன்னீர்செல்வம் லெட்சுமி***
***வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி***




# சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும்

2

- கலாநிதி கி.புண்ணியமூர்த்தி LLB-

## 3. சர்வதேச நாடுகளின் கல்விப் போக்குகள்

**மலேசியாவில்** கல்வி தொடர்பிலான பெருந்திட்டம் (Education blue print) 2013-2025 தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத் தப்பட்டு வருகின்றது. அதில் பிரதானமாக அமைவது சர்வதேச தரத்திலான கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் வழங்கு வதும் ஆங்கில மொழியைக் கட்டாயமாக்குவதுமாகும்.

**சிங்கப்பூரின்** கல்வி இலக்குகளில் பிரதானமாக அமைவது எண்மிய (Digital) கல்வியறிவை வலுப்படுத்தவதாகும். இங்கு ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலம் முதன்மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது. 1992 இல் சிங்கப்பூரில் தொழில்கல்வித் தெரிவு மாணவர்களின் இறுதித் தெரிவாக இருந்தது ஆனால் இன்று அது முதல் தெரிவாக மாறியுள்ளது. அந்தவகையில் சிங்கப்பூர், தொழிற்கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தொழில்சார் மற்றும் தொழிநுட்பத் திறன்களை அறிவுசார் பொருளாதாரத்துக்கு எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதற்குச் சிங்கப்பூர் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

உலகிலேயே குழந்தைகள் மகிழ்ச்சியாகக் கற்கும் நாடுகளில் முதலிடத்தைப் பின்லாந்து பிடித்துள்ளது. 1990 களில் **பின்லாந்து** ஒரு விவசாயத்தின் மூலம் வருமானமீட்டும் ஒரு நாடாக இருந்தது ஆனால் இன்று பின்லாந்து தொழிநுட்பத்தினூடாக வருமானமீட்டும் ஒரு நாடாக மாற்றம்பெற்றுள்ளதற்குக் காரணம் கல்வியாகும். பின்லாந்துக் குழந்தைகளில் மூவரிலொருவர் ஆசிரியராவதை விரும்புகின்றனர். ஆசிரியத்தொழில் ஒரு முழுமையான அர்ப் பணிப்புமிக்க தொழிலாகக் கருதப்படுகின்றது. பின்லாந்துப் பிள்ளைகள் பாடசாலையை வீட்டுக்குச் சமமாகவே கருதுகின்றனர் உதாரணமாக அந்த மணவர்கள் பாடசாலைக்குச் செருப்பு அணிந்து செல்வதில்லை. அங்கு ஆசிரியர்கள் கல்வியியல் நிபுணர்களாகவே கருதப்படுகின்றனர். அனைத்து ஆசிரியர்களும்

முதுகலைப்பட்டம் பெற வேண்டியது கட்டாயமானதாகும். 7 வயதிலேயே பிள்ளை பாடசாலையில் இணைகிறது. ஒத்துழைத்துக் கற்றலே அங்கு மேலோங்கியுள்ளது. மாணவர்கள் அங்கு ஒருவரோடொருவர் ஒப்பிடப்படுவதில்லை. வீட்டுவேலைகள் வழங்கப்படுவதில்லை. நமது நாட்டைப்போல் பொதுவான நுழைவுத் தேர்வுகளோ, மனனம் செய்து ஒப்புவிப்பதோ அங்கு இல்லை. கரும்பலகையில் எழுதும் குறிப்புக்களை பயிற்சிக் கொப்பிகளில் பிரதிசெய்வதும் அங்கு இல்லை உலகில் ஆசிரியர் களுக்கு அதிக வேதனம் வழங்கும் நாடும் பின்லாந்துதான் என்பது குறிப்படத்தக்கது. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் 100 சதவீதம் பட்டாதாரியாகின்ற ஒரு நாடாகப் பின்லாந்து உள்ளது. விளையாட்டினூடாகக் கற்பிக்கும் முறைமை வெற்றிகரமாக அங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

பின்லாந்தில் உயர்நிலை மேல்நிலைக் கல்வி பெறுதல் விகிதங்கள் உயர்வாக உள்ளன இங்கு பொது மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) ஆகிய இரு தெரிவுகளும் உள்ளன. 2011 இல், 70% மேல்நிலை மாணவர்கள் தொழிற் கல்வித் திட்டங்களில் சேர்ந்துள்ளனர். ஆரம்பக் கல்வி பெறாத பெரியவர்களின் கணிசமான விகிதமும் இதில் அடங்கும்,

ஏனெனில் தொழிற்கல்வி திட்டங்களில் 15-19 வயதுடைய வர்களின் சேர்க்கை 30% மூன்றாண்டு பொதுக் கல்விப் பாடத்திட்டத்தின் முடிவில், மூன்றாம் நிலைக் கல்விக்கான அணுகலை வழங்கும் தேசிய மெட்ரிகுலேஷன் தேர்வை மாணவர்கள் எடுக்கலாம். இது இடைவிலகலைத் தடுக்க உதவுகிறது. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொழிலாளர் சந்தையில் எளிதாக நுழைவதற்கு உதவும். மாணவர்கள் மேல்நிலை மற்றும் பாலிடெக்னிக்கில் மூன்றாம் நிலைக் கல்வியையும் (VET) தொடர முடியும்.

**ஜப்பானில்** 95% கனிஷ்ர இடைநிலை மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக்குச் செல்கிறார்கள். சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் 38% பேர் உயர்கல்விக்கு முன்னேறுகிறார்கள். ஜப்பானிய குழந்தைகள் பாடசாலைகளில் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். சனிக்கிழமைகள் உட்பட ஆண்டுக்கு 240 நாட்கள் வரை பாடசாலைகள் இயங்குகின்றன. பாடசாலை நேரத்திற்குப் பின்னர் பாடசாலையில் தங்கி, பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் பங்கேற்க அல்லது தங்கள் வகுப்புத் தோழர்களுடன் விளையாட்டுகளை விளையாட முனைகிறார்கள், மேலும் சிலர் மாலை வரை வெளியே செல்வதில்லை. கூடுதலாக, ஜப்பானிய மாணவர்களுக்கு நிறைய வீட்டுப்பாடம் செய்ய வேண்டியுள்ளது. அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை பாடசாலையில் தங்கித் தமது பாடங்களுக்குத் தயாராவதற்குச் செலவிடுகிறார்கள். புாடசாலை கள் தமது மாணவர்களின் வெளியுலக வாழ்க்கையை மேற்பார் வையிடுகின்றன. சில பாடசாலைகள் அவ்வப்போது ஆசிரியர் களையும் தன்னார்வப் பெற்றோர்களையும் தெருக்களிலும் நகர மையப் பகுதியிலும் ரோந்து செல்ல அனுப்பி, தீய பழக்கவழக் கங்கள் மற்றும் சிறார் குற்றங்களுக்கு எதிராகப் பிள்ளைகளைப் பாதுகாக்கின்றன.

## 4. இலங்கையின் கல்விச் செயன்முறை


கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் கல்விச் செயன் முறை சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய நிலைக்கு நகர்கிறதா? இல்லையா? என்னும் வினா பலராலும் எழுப்பப்பட்டு வருகின்றது. பல்வேறு காரணங்களால் பாடசாலைகளுக் கிடையிலான வேறுபாடுகள் அதிகரித்துப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கான சிறந்த பாடசாலைகளைத் தேடிச் செல்வ தைக் காணக்கூடியதாக உள்ளது. திறமைமிக்க மாணவர்களைப்

பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கும், பல்கலைக்கழகங்களுக்குச் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப் பதற்கும் பொதுப் பரீட்சைகளைப் பயன்படுத்தும் நம் கல்வி அமைப்புப் பரீட்சை மையக் கல்வி முறையையே பிரபல்யப் படுத்தியுள்ளது. இந்தப் பின்னணியில் பாரம்பரிய அறிவு சார்ந்த பொதுப்பரீட்சைகளில் மாணவர்கள் பெற்ற வெற்றிகள் பாடசாலையின் உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கும் ஒரே காரணியாக மாறியுள்ளதால் பாடசாலைக் கல்விக்குப் பொறுப் பானவர்கள் 21ம் நூற்றாண்டுச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய திறமையான குடிமக்களை உருவாக்கும் முக்கிய பங்கைப் படிப்படியாக மறந்துவிட்டனர். 21 ஆம் நூற்றாண்டின் கல்விக்குக் கற்றல் திறன், எழுத்தறிவுத் திறன் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் தேவை.

“தற்போதைய கல்வி முறை, ஆசிரியர், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின்போது மாணவர்களுக்குக் குறிப்புக்கள் வழங்கு வதையும் அவற்றை மாணவர்கள் நெட்டுருச் செய்து தேர்வு எழுதிச் சித்தியடைவதையும் தூண்டுவதாக அமைந்துள்ளது. இது அறிவு மற்றும் நினைவாற்றலை மட்டுமே அளவிடுகிறது, மாணவர்களின் படைப்பாற்றல், புத்திக்கூர்மை மற்றும் தொடர் பாடல்த்திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதில்லை. இன்றைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு விடயங்களைப் பெயரிடவோ, வரையறுக்கவோ பட்டியலிடவோ அல்லது விளக்கவோதான் கற்பிக்கிறார்களே தவிர ஆக்கரீதியான தேடல்களுக்கு இட்டுச்செல்வதில்லை.

புதிய தேர்ச்சி அடிப்படையிலான கற்றல், கற்பித்தல் அணுகுமுறைக்கு ஆசிரியர்களை அழைத்துச் செல்ல அதிகாரிகள் செலுத்தும் வரையறுக்கப்பட்ட கவனம் காரணமாக ஆசிரியர்கள் இன்று தொழில் புரட்சிக்கு முந்திய அல்லது தொழில் புரட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட, அக் காலத்தில் பிரபல்யமாக இருந்த விரிவுரை முறை அல்லது உரையாடல்/கலந்துரையாடல் முறையுடன் ஒட்டிக்கொள்ள நேரிட்டுள்ளது. இதனால் புதிய அறிவு சகாப்தத்தில் முன்னிலை பெற்ற பரிசோதனை வழியிலான அனுபவ முறைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

ஆசிரியர்கள், மாணவர்களது பேரறிகைத் திறன்களை வளர்ப்பதில் போதிய கவனம் செலுத்துவதில்லை. வெறுமனே மனனம் செய்விப்பதிலும் மனனம் செய்ததை மீட்கச் செய்வதிலுமே தமது காலத்தைச் செலவிடுகின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களை பொதுப் பரீட்சைகளுக்குத் தயார்படுத்தப் பாடப்புத்தகம், ஆசிரியர் உருவாக்கிய குறிப்புகள் அல்லது மாதிரிக் கேள்வி - பதில்களைப் பயன்படுத்துகின்றனர். இன்று சந்தையில் ஏராளமாகக் காணப்படும் துணைநூல்கள் சிறு குறிப்புப் புத்தகங்கள், வினாவிடைப் புத்தகங்கள் என்பன பாடநோக்கத்துக்கப்பால் மாணவர்களை இயந்திரமயமான கற்றலுக்கு வழிப்படுத்துகின்றன. இந்த வகைக் கற்றலின் தீமைகள் குறித்துக் கல்வியியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பல புகார்களை அளித்தாலும், சீரான ஆளுமைக் காக வளரும் மாணவர்களைக் கடுமையாக ஏமாற்றும் நடைமுறை இன்றுவரை தொடர்கிறது.



தொடரும்...

## "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 26
## கதைகளால் நியமாகி...

### தாய் மகளிடம் கேட்ட வேண்டுகோள்



தந்தை இறந்ததாலும் தாயை கவனிக்க முடியாததாலும் முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டாள் மகள் வேலைக்குச் செல்வதாலும் அவளை கவனிக்க முடியவில்லை. மாதத்திற்கு ஒருமுறை தவறாமல் தாயை மகள் சென்று பார்த்துவந்தாள். காலம் ஓடிக்கொண்டே இருந்தது. தாய் நோய் வாய்ப்பட்டிருப்பதாக தகவல் வந்து தாயை பார்க்க சென்றாள்.

நோய்வாய்ப்பட்டிருந்த தாயிடம் என்னம்மா வேண்டும் என்று கேட்டாள். இங்கு கொசுக்கடியும் காற்று இல்லாமலும் நீண்ட காலமாக வேதனைப்பட்டுக்கொண்டிருக்கின்றேன். அதனால் சில மின்விசிறிகளை வாங்கிக் கொடு. பழுதடைந்த உணவை உண்டுக்கொண்டு இருக்கின்றேன் அதனால் நோய்வாய்ப்படுகின் றேன். என்றாலும் அந்த உணவை உண்டு பழகிவிட்டேன். என்றாலும் ஒரு குளிர்சாதனப்பெட்டி வாங்கிக்கொடு என்றாள்.

தாயை ஆச்சரியமாக பார்த்த மகள் நான் பலமுறை உன்னை பார்க்க வந்திருக்கிறேன் ஒருமுறையாவது நீ என்னை கேட்கவே இல்லையே என்றாள். இதைக்கேட்ட தாய் அவளை உற்றுப்பார்த்தாள் பின்பு சொன்னாள் இந்த துன்பங்களையும் துயரங்களையும் இந்த சூழலையும் நான் பழகிவிட்டேன் ஆனால் உன்பிள்ளைகள் உன்னை இங்கு அனுப்பும் போது இந்த சூழலில் உன்னால் வாழமுடியாது. நீ கொசுக்கடிக்கும் காற்றின்றி துன்பப்பட்டாமல் இருக்க பழுதடைந்த உணவை உண்ணாமல் நல்ல உணவை உண்ணவும் மின்விசிறியும் குளிர்காதனப் பெட்டியும் அவசியம் மகளே என்றாள் தாய் இதைக்கேட்ட மகள் அதிர்ச்சியில் விறைத்துப்போனாள்.

**நீதி – காயப்படும் விடயங்களே கற்றும் கொடுக்கின்றன.**

# தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சர்வதேச புரிந்துணர்வுக்கும் குடியியல் கல்வியின் அவசியம்




**S.Logarajah**
**Lecturer,**
**Batticaloa NatiOnal College of Education**


**2**



*குடியியல் கல்வி பின்வரும் வழிகளில் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துகிறது:*

**1. பொறுப்புணர்வைப் பகிர்வதை ஊக்குவித்தல்:**

குடியியல் கல்வி குடிமக்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வு உணர்வை வளர்க்கிறது. தனிநபர்கள் அனைவரும் ஒரு பெரிய சமூகத்தின் ஒரு பகுதி என்றும், அவர்களின் செயல்கள் தங்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டையும் பாதிக்கின்றன என்றும் இது கற்பிக்கிறது. மக்கள் தங்கள் பாத்திரங்களையும் பொறுப்பு களையும் புரிந்து கொள்ளும்போது, அவர்கள் நாட்டின் வளர்ச்சி மற்றும் சமூக ஒற்றுமைக்கு பங்களிக்கும் வாய்ப்பு அதிகமாகும்.

**2. தேசிய அடையாளம் மற்றும் பெருமையை உருவாக்குதல்:**

குடியியல் கல்வி மூலம், மாணவர்கள் தங்கள் நாட்டின் வரலாறு, மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் பற்றி அறிந்துகொள்கிறார்கள். இந்த அறிவு தேசிய அடையாளம் மற்றும் பெருமை உணர்வை உருவாக்க உதவுகிறது, இது வெவ்வேறு சமூக, மத மற்றும் பிராந்திய பின்னணிகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்க முடியும். குடிமக்கள் தங்கள் நாட்டுடனும் அதன் இலட்சியங்களுடனும் இணைந்திருப்பதாக உணரும்போது, அவர்கள் பொது நன்மைக்காக ஒன்றிணைந்து செயல்பட அதிக வாய்ப்புள்ளது.

**3. சமூக ஒற்றுமையை வளர்த்தல் :**

குடியியல் கல்வி சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதை போன்ற மதிப்புகளை ஊக்கு விக்கிறது. தனிநபர்கள் தங்கள் நாடு பல்வேறு சமூகங்களால் ஆனது என்பதையும், ஒருவருக்கொருவர் வேறுபாடுகளை மதிப்பதன் மூலம் ஒற்றுமை வருகிறது என்பதையும் புரிந்துகொள்ள

இது உதவுகிறது. இன, கலாச்சார அல்லது மத பன்முகத்தன்மை கொண்ட நாடுகளில் இது மிகவும் முக்கியமானது.

### 4. ஜனநாயகத்தில் செயலில் பங்கேற்பதை ஊக்குவித்தல்:

குடியியல் கல்வி வாக்களித்தல், தன்னார்வத் தொண்டு செய்தல் அல்லது சமூக முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அரசியல் செயல்பாட்டில் தீவிரமாக பங்கேற்க மக்களுக்கு அறிவை அளிக்கிறது.

பெருகி வரும் உலகமயமாக்கப்பட்ட உலகில், நாடுகளுக்கு இடையே அமைதி மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு சர்வதேச இயக்கவியலைப் புரிந்துகொள்வது அவசியம். குடியியல் கல்வி பின்வரும் வழிகளில் சர்வதேச புரிதலை ஊக்குவிக்க உதவுகிறது:

### 5. பூகோளப் பிரசைகளை உருவாக்கல்:

குடியியல் கல்வி தனிநபர்கள் தேசிய எல்லைகளுக்கு அப்பால் சிந்திக்கவும், உலகளாவிய குடிமக்களாக தங்கள் பங்கை அங்கீகரிக்கவும் ஊக்குவிக்கிறது. இந்த மனநிலை காலநிலை மாற்றம், வறுமை மற்றும் மனித உரிமைகள் போன்ற உலகளாவிய பிரச்சினைகளில் பொறுப்புணர்வு உணர்வை வளர்க்க உதவுகிறது. பிற நாடுகளுடனான அவர்களின் சார்புநிலையைப் புரிந்துகொள்வதன் மூலம், உலகளாவிய தீர்வுகளுக்காக மக்கள் ஒன்றிணைந்து செயல்பட அதிக வாய்ப்புள்ளது.

### 6. கலாச்சார பன்முகத்தன்மையை மதிக்க கற்றுக்கொடுத்தல்:

குடியியல் கல்வியில் பெரும்பாலும் வெவ்வேறு கலாச் சாரங்கள், மரபுகள் மற்றும் மதங்கள் பற்றிய பாடங்கள் அடங்கியுள்ளன. இது மாணவர்கள் பன்முகத்தன்மையைப் பாராட்டவும், பிற நாடுகளைச் சேர்ந்த மக்களை மதிக்கவும் கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. இத்தகைய புரிதல் அந்நிய வெறுப்பின் வாய்ப்புகளைக் குறைக்கிறது மற்றும் உலக அளவில் அமைதியான சகவாழ்வை ஊக்குவிக்கிறது.

### 7. அமைதி மற்றும் இராஜதந்திரத்தை ஊக்குவித்தல்:

சர்வதேச உறவுகள், உலகளாவிய மோதல்கள் மற்றும் இராஜதந்திரம் பற்றிய ஆய்வு மூலம், குடியியல் கல்வி, நாடுகள் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை மாணவர்களுக்குக் கற்பிக்கிறது. சர்வதேச மோதல்களைத் தீர்ப்பதில் அமைதியான கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த் தைகளின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. மோதல்கள் குறித்த இராஜதந்திரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி இளைஞர்களுக்குக் கற்பிப்பது நீண்டகால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்கும்.

### 8. உலகளாவிய சவால்களைப் புரிந்துகொள்வது:

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, பொருளாதார சமத்துவமின்மை மற்றும் சர்வதேச மோதல்கள் போன்ற உலகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள குடியியல் கல்வி தனிநபர்களுக்கு உதவுகிறது. இந்தப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், தனிநபர்கள் உலகளாவிய விவாதங்களில் ஈடுபடவும், கூட்டுத் தீர்வுகளை நோக்கிச் செயல்படவும் சிறப்பாகத் தயாராக உள்ளனர்.

### 9. சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல்:

குடியியல் கல்வி, ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளின் மதிப்பையும், உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதில் அவற்றின் பங்கையும் வலியுறுத்த முடியும். சர்வதேச ஒப்பந்தங்கள், சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் முக்கியத்

துவத்தைப் புரிந்துகொள்வது, உலகம் முழுவதையும் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றிணைந்து செயல்படுவதன் அவசியத்தைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவுகிறது.

### முடிவுரை

தேசிய ஒற்றுமைக்கும் சர்வதேச புரிதலுக்கும் குடியியல் கல்வி அவசியமாகும். ஏனெனில் இது குடிமக்களுக்கு சமூகத்தில் தீவிரமாகப் பங்கேற்பதற்குத் தேவையான அறிவு மற்றும் மதிப்பு களை வழங்குகிறது, பன்முகத்தன்மைக்கு மதிப்புக் கொடுக் கின்றது. மேலும் தேசிய மற்றும் உலகளாவிய அளவில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது. இது தங்கள் நாட்டின் மற்றும் உலகின் நல்வாழ்வுக்கு பங்களிக்கக்கூடிய தகவலறிந்த, பொறுப்பான மற்றும் பச்சாதாபமுள்ள நபர்களை உருவாக்குகிறது. மேலும் குடியியல் கல்வி மூலம், தங்கள் சொந்த நாட்டின் செழிப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு உறுதியளித்து, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் தங்கள் பங்கை அறிந்திருக்கும் எதிர்கால சந்ததியினரை நாம் வளர்க்க முடியும்.

*முற்றும்.*

### உசாத்துணை


AEGEE Europe (2016), “Policy Paper on Civic Education”, https://www.aegee.org/policy-paperon-civic-education/ (accessed on 3 October 2024).

Mbakwe, K. (2015). Education and National Integration. Aba: Che Modal Publisher.

Carter, L.H. & Elshtain, J.B.(1997). Task Force on Civic Education Statement of Purpose, *P.S. Political Science and Politics*.

Center for Civic Education(1991). *Civitas: A Framework for Civic Education*. Calabasas, CA: Center for Civic Education.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003


## மலையகத்தானின் கவிதை

லயத்துக்கு அழகு சேர்க்கும்
கால் மிதிக்கும் லைசன் கல்லு
அத தாண்டி முன் வந்தா
பாய் விரித்த மண்வாசல்
மேட்டு லயம் பணிய லயம்
நாலாபுறம் கோடி பக்கம்
ஒன்னா நாங்க கூடி பேசும் பாராளுமன்றம்
போலாகும் மின்மினுக்கும் குப்பிலாம்பு
லயமுழுக்க ஒளி வீசும்
லாம்பெண்ண தீர கிட்ட
திரிகூட திண்டாடும்
இவிங்க வாழ்க்கை
லயத்து வாழ்க்கை
ஏளனமா பேசாதீங்க
கேவலமா வாழ நாங்க
குடிபெயர்ந்து வல்ல இங்க
அன்று வந்து இன்றுவரை
உழைப்புக்கு மட்டும் தாங்க
மாற்றம் ஒன்னும் மாறவில்ல
மாறடிக்க மட்டும் நாங்க
நாகரீகம் மாருதிங்க
நாங்க மட்டும் தேயுறோங்க
நாளைய விடிவுக்காக
தலைமைத்துவம் ஏற்கவாங்க..



***- ம. இஸ்மைல் -***



# முயற்சிப்போம் வெல்வோம்

**- S.Jeleela -**

*ஒவ்வொரு சாதனையும் முயற்சி என்ற ஒற்றைச் செயலிலேயே தொடங்குகின்றது...*

விதைத்துக்கொண்டே இரு முளைத்தால் விருட்சம் இல்லையேல் உரம். முடியாது என்று சொல்வது மூட நம்பிக்கை! முடியுமா என்று கேட்பது அவநம்பிக்கை! "முயற்சிகள் தவறலாம் முயற்சிக்கத் தவறாதே" என்ற வரிகளுக்கு உலகின் மிகச் சிறந்த உதாரணமாக மிளிருகின்றவர்கள் பலர் இருக்கலாம்.

ஒவ்வொரு நாளும் கூட்டில் இருந்து இரைதேடிச் செல்லும் பறவை தனக்குத் தேவையானது கிடைக்கும் என்ற நம்பிக்கை யோடு சிறகை விரிக்கத் தொடங்குகிறது. நம்பிக்கையே வெற்றி யின் முதற்படி. வெற்றியாளர்கள் மட்டுமல்ல எவருக்கும் முயற்சி இல்லை என்றால் வளர்ச்சி இல்லை.

பிறந்த குழந்தை, தவழ. பின்னர் நடக்க. பேச முயற்சிக்கிறது. இப்படி ஒவ்வொரு முயற்சியுமே அக்குழந்தையை வளர வைக்கின்றது. இவை அனைத்தும் குழந்தைகள் தங்களது பெற்றோரை பார்த்து அப்படியே பிரதிபலிக்கின்றனர். Children learn by Imitation என்பர். ஆனால் வளர்ந்த பிறகு வாழ்க்கை முழுவதும் பிறரின் பிரதிபலிப்பாய் இருந்தால் தோல்வி. வாழ்வெல்லாம் முயற்சியானால் வெற்றியே!

இராபர்ட் ப்ரோஸ்ட் என்னும் அமெரிக்க நாட்டு கவிஞர் ஒருமுறை ஒரு காட்டினில் ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றார். நடுக்காட்டில் அப்பாதை இரண்டாகப் பிரிந்தது. ஒரு பாதை மனிதர்கள் அடிக்கடி பயணித்த தெளிவான பாதை. மற்றொன்று அடிக்கடி பயணிக்காத காய்ந்த சருகுகளால் மூடியிருந்த தெளிவற்ற பாதை. அதிகம் பயணிக்காத இரண்டாவது பாதையில் பயணித்தார். புதிய முயற்சியினால் புதிய அனுபவம் கிடைத்தது. அற்புதக் கவிதைகளை அகிலத்திற்குத் தந்தவர். The Read Not Taken எனும் கவிதையில் "அதிகம் பயணிக்காத பாதைகளில் நடக்கக் கற்றுக் கொண்டவர் வாழ்க்கை, அதிகம் வாசிக்கப்படும்" என்கிறார். ஒவ்வொருவரின் வெற்றிக்கும் காரணம் புது முயற்சியே!

முயற்சிப்போம்! வெல்வோம்!

# விடாமுயற்சி

- செல்வன். குலநேசன் கோகுலதர்ஷன் -
**இ/பலா/ கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரி பலாங்கொடை**



"இப்படியே போனா எங்க புள்ளைங்கட எதிர்காலம் என்ன ஆகுமோ? இவங்கள சரி நல்லா படிக்கவைச்சுடனும்னு பாத்தா... எங்க பொழப்புல மண்ணள்ளி போட்டுட்டானுங்களே... இந்த பாவிப்பயலுக...... இன்னியோட எட்டாவது நாளா வேல இல்லாம வீட்டுக்கு வந்தாச்சி....." என்று மூச்சு விடாமல் புலம்பியவாறு தலையில் மாட்டியிருத்த கொழுந்துக் கூடையை கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, இடுப்பைச்சுற்றி கட்டியிருந்த படங்கை அவிழ்த்து கொடியில் போட்டாள் செல்லம்மா. அத்தனையும் பார்த்துக் கொண்டிருந்த செல்லம்மாவின் மூத்த மகன் ரமேஷ் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, தன் தாயை நோக்கினான். "அம்மா... நான் வேணும்னா ஏதாவது ஒரு வேலைக்கு போய்ட்டு... வேலையும் செஞ்சுகிட்டே படிக்கிறேமா" என்றவனை அதிர்ச்சியுடன் நோக்கினாள் செல்லம்மா. "அதெல்லாம் வேணாம்பா.... நீ நல்லா படி. நீயும் எங்கள மாதிரி இந்த தோட்டத்துல இருந்து கஷ்டப்பட வேணா.... அப்பாவும் நானு இருக்கிறப்ப நீ இப்படியெல்லாம் பேசக் கூடாதுபா....." என நா தழுதழுக்க கூறியவளின் நெஞ்சில் தான் ஜெயித்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் அதிகமாகவே இருந்தது.

அதே நேரத்தில் கையில் கவாத்து கத்தியுடன், தலையில் சுற்றியிருந்த துணியை அவிழ்த்தவாறே... வீட்டினுள் நுழைந்தான் கதிரேசன். "சம்பளத்த தான் கூட்டித்தரமாட்டேனு சொல்லிட்டா னுங்க.... இப்ப இருக்கிற தேயலய புடுங்கிட்டு.... கோப்பி போட போறானுங்களாம்...." எனக்கூறி முடிக்கு முன், "யேன் இப்படி அடாவடித்தனம் பன்னுறானுங்கனு தெரியலயே.... எப்புடியாவது இவனுங்கள கர சேத்துடலாம்னு பாத்தா... உங்க பொழப்புலயும் நெருப்ப வச்சுட்டானுங்களே...." என தலையில் அடித்துக்கொண்டு புலம்பினால் செல்லம்மா. "கவலபடாத அத தட்டி கேக்க... எங்க மந்திரி தம்பியு..... தோட்ட தலவர்மாரும் வாறாங்க... நானு ஒடனே ஸ்டோருக்கு போவனு.. கொஞ்ச காட்ட தண்ணி குடு புள்ள..." என்று கேட்ட கதிரேசனுக்கு தான் குடிக்கப்போகும் கடைசி தேனீர் இதுவெனத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நானு-ஓய எனும் இயற்கை எழில் கொஞ்சும் தோட்டத்தின் உடரதல்ல மேற்பிரிவை பிறப்பிடமாகவும், வசிபிடமாகவும் கொண்ட கதிரேசன்-செல்லம்மா தம்பதியினருக்கு மூன்று ஆண் குழந்தை

கள். தான் படிக்காவிட்டாலும் தங்களது பிள்ளைகளுக்கு கல்வியை புகட்டிவிட வேண்டும் என நினைக்கும் குடும்பங்களில் இதுவும் ஒன்று. நினைப்பது போன்று எல்லோருக்கும் எதுவும் அமைந்துவிடுவதில்லை. ஆனால் இந்த குடும்பத்தில் வறுமை வாட்டினாலும். கல்வியில் செல்லம்மாவின் குழந்தைகளை மிஞ்ச யாரும் இல்லை. இதனால் இக்குடும்பத்தின் மேல் எல்லோருக்கும்




ஒரு மரியாதை. மூத்தவன் ரமேஷ் உயர்தரத்தில் கலைப்பிரிவில் இறுதி வருடத்தில் பரீட்சையை எதிர் நோக்கி படித்துக்கொண்டிருந் தான். இரண்டாவது மகன் ரகு, சாதாரண தரத்திலும், இளையவன் ரவி எட்டாம் தரத்திலும் கற்றுக்கொண்டிருந்தனர். தனது ஊரில் அவ்வப்போது தோட்ட நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கு மிடையில் நடக்கும் போராட்டங்கள் ரமேஷை வெகுவாக பாதித்திருந்தது. தனது பெற்றோர் உட்பட ஊர் மக்களுக்கு ஒரு விடிவுக் காலத்தை காட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். படிப்பு தவிர்ந்த மற்ற நேரங்களில் தனது தம்பியுடன் வீட்டுத்தோட்டம் செய்து, பெற்றோருக்கு உதவி செய்தான்.

மனைவி கொடுத்த தேனீரை குடித்துவிட்டு, பாக்கை சீவி வாயில் போட்டவாறே "வாறேன் புள்ள... இவனுங்க ஆத்துக்கு மேல இருக்க அந்த காட்ட அழிச்சிட்டு கோப்பிய போட்டாலு பரவாயில்ல... ஆனா வருமானத்த தாற தேயலய புடுங்கிட்டு இல்ல போட பாக்குறாங்க...என்னா ஏதுனு ஸ்டோர் வரைக்கு போய் பாத்துட்டு வாறே..." எனக் கூறியவாறே சென்ற கணவனின் உருவம் மறையும் வரை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். இரண்டு நாள் விடாது பெய்த மழையில் ஆங்காங்கே கிடந்த அழுக்கு துணிகள் நினைவுக்கு வர அத்தனையும் சேகரித்து எடுத்துக்கொண்டு கொல்லை புறமாக உள்ள பீலிக்கரைக்குச் சென்றாள்.

நண்பகல் இரண்டு மணியளவில் பக்கத்து வீட்டு மணியின் மகன் பதற்றத்துடன் மூச்சுவாங்க ஓடி வந்து, "மாமி மாமி...." எனக்க கூக்குரலிட்டான்.

அவனது சத்தம் அங்குள்ள அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. அனைவரும் அவனைச் சுற்றி நின்றபடி.... "மாமி ஸ்டோர்கிட்ட நா வெறகு பொருக்கிட்டு இருந்தப்ப அங்க நெறய பேர் கதைச்சுகிட்டு இருந்தாங்க... அந்த நேரோ சண்ட போட்டுகிட்டாங்க இங்க மாமாவ யாரோ தள்ளிவுட்டு அடிபட்டு ரத்தமா போவுது.. வாங்க மாமி போவோ...." என்று சொல்லி முடிக்கும் முன் மயங்கி விழுந்தாள் செல்லம்மா. பிள்ளைகள் மூவரும் தாயின் நிலை கண்டு கலங்கி நின்றனர்.

தனது கனவனின் உயிரற்ற உடலை பார்த்து கதறி அழுதாள் செல்லம்மா. தனது வாழ்கையே இருண்டுவிட்டதாய் புலம்பினாள். தனது குழந்தைகளின் எதிர்காலத்தையே சிதைத்துவிட்டதாய் சாபமிட்டாள்.

நாட்கள் உருண்டோடின, தனது கணவன் கதிரேசனின் நினைவுகளை நெஞ்சில் சுமந்தவாறு பிள்ளைகளுக்காக வாழத் தொடங்கினாள். தந்தை இல்லாத குறை தெரியாத அளவுக்கு குழந்தைகளை கவனித்துக்கொண்டாள். தோட்டத்தில் நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகமானதால், வருமானத்திற்கும் வழியில்

லாமல் போனது. இதனால் வருமானத்திற்காக வெளித் தோட்டங் களுக்குச் செல்லவேண்டிய நிலை. அயராது உழைத்தாள் செல்லம்மா. உயர்தர பெறுபேற்றை எதிர்ப்பார்த்திருந்த ரமேஷ் தனது தாய்க்கு உதவியாக ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்தான்.

இந்நிலையில் உயர்தர பெறுபேறுகள் வெளியாகின. ரமேஷ் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று சட்டக்கல்லூரிக்கு தெரிவாகியிரு ந்தான். செல்லம்மாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த ஊரிலேயே பல்கலைக்கழகத்திற்கு தெரிவான முதல் மாணவன் என ஊர் மக்களால் கொண்டாடப்பட்டான். தந்தையை இழந்த நிலையில் தாயின் வழிகாட்டலில் சாதித்திருப்பதை எண்ணி பெருமையடைந்தனர்.

இதை அறிந்த தோட்ட நிர்வாகி மிகவும் அதிர்ச்சியடைந்தான். “இவனை அதிகம் படிக்கவைத்தால், இவ்வூரிலுள்ள ஏனைய பிள்ளைகளும் இவனைப்போலவே உருவாகிவிடுவார்கள் அதற்குப் பிறகு தோட்டத்தில் வேலை செய்ய ஆளே இருக்காது. தோட்டத்தை இழுத்து மூடவேண்டிய நிலை வரும்.” எனப்பயந் தான். அதற்கான சதி திட்டத்தை தீட்டினான். ஊர் தலைவரிடம் தன்னை வந்து சந்திக்கும் படி தூது அனுப்பினான்.

தோட்ட நிர்வாகியை சந்தித்த ரமேஷிற்கு அதிர்ச்சி காத்திருந்தது. ரமேஷ் நன்றாக படித்திருப்பதனால், இதே தோட்டத்தில் முகாமையாளராக வேலை தருவதாகவும், அத்துடன் தங்குவதற்கு வசதியான வீடு ஏற்பாடு செய்வதாகவும், செல்லம்மாவிற்கும் வேலை தருவதாகவும் ஆசை காட்டினான். ஆனால் ரமேஷ் தனது தாய், தந்தையின் கனவை நனவாக்குவதிலே குறியாக இருந்தான். தனது கட்டளைக்கு ஒத்துவராத காரணத்தினால், ரமேஷ் தற்போது வசித்த ஓட்டை வீடும், தாய் தோட்டத்தில் வேலை இல்லாத காரணம் காட்டி பறிக்கப்பட்டது.

ஊர் மக்களின் உதவியினால் கைவிடப்பட்ட மாட்டுக்கொட்டில் ஒன்றில் தஞ்சம் புகுந்தனர். என்ன சோதனை வந்தாலும், உலகமே எதிர்த்தாலும் தனது இலட்சியத்தை அடைவதில் குறியாய் இருந்தான் ரமேஷ் தனது தம்பிகளும் தன்னைப் போலவே சிறப்பாக படிப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். ஆனாலும் வீட்டில் வறுமைக்கு பஞ்சமில்லை. பட்டப்படிப்பைத் தொடர்ந்துக் கொண்டே ஓய்வு நேரங்களில் வேலை செய்து தனது செலவுகளையும் பார்த்துக்கொண்டு வீட்டிற்கும் பணம் அனுப்பி வைத்தான்.

வருடங்கள் கழிந்தன… ரமேஷ் திறமையாக தனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்து, ஒரு சட்டத்தரணியாக தனது ஊருக்குள் கால் பதித்தான். தந்தையின் உருவப்படத்திற்கு முன்னால் நின்று அவரின் கனவை நனவாக்கி விட்டதாய் கண்ணீர்மல்க ஆசி வேண்டினான். செல்லம்மாவின் மகிழ்ச்சிக்கும், பெருமைக்கும் அளவேயில்லை.

சட்டப்படி பரம்பரை பரம்பரையாக தான் குடியிருந்த வீடு தனக்கே சொந்தம் என்று வாதாடினான். வருடக் கணக்கில் வாழ்ந்து அனுபவித்தபடியால் நீதிமன்ற உத்தரவு படி வீடு செல்லம்மாவிற்கே சொந்தமானது. ஊராரும் தத்தமது வீடுகளை தமக்கே சொந்தமாக்கிக் கொண்டனர். படித்தால் நாம் வாழும் அடிமைத்தனமான வாழ்விலிருந்து விடுபடலாம் என்பதை புரிந்துக் கொண்டு தத்தமது பிள்ளைகளை படிக்கவைப்பதில் ஆர்வம் காட்டினர்.

தனது தந்தை கதிரேசன் எதேச்சையாக தள்ளிவிடப்பட வில்லை என்பதையும், கொல்லப்பட வேண்டும் என்ற நோக்கத்

தினால் செய்யப்பட்ட கொலை முயற்சி என்பதை தெரிந்துக் கொண்டு இப்படி இன்னுமொரு சம்பவம் நடந்துவிடக் கூடாது என்பதற்காக... வாதாட தொடங்கினான்.

கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. ஊர் மக்களால் கொண்டாடப்படும் ரமேஷின் தேடல் விசாரணை தொடரும். நல்லதொரு விடிவுக்காலமும் பிறக்கும்.



## தனிமையின் இனிமை

*என் வாழ்வில் பலர்*
*நட்சத்திரமாக இருப்பினும்*
*வானெனும் பரந்த என் வாழ்வில்*
*நிலவாய் கூட நானில்லை*
*என எண்ணும் போதெல்லாம்*
*என் நெஞ்சம் முழுவதும்*
*வலிகள் நிரம்பி*
*என் கண்ணோரம் துளிர்விடும்*
*ஒவ்வொரு துளியும்*
*என் கன்னம் தழுவி*
*மண்ணைச் சேரும் போது*
*என்னுள் உதிக்கும் ஓர் உணர்வு -*
*தன் சிரசின்*
*ஓர் புறம் ஆதவனும்*
*மறுபுறம் நிலவையும்*
*ஆபரணமாக கொண்ட*
*உலகு தனக்கென ஒளியாய் அவற்றோடு*
*இணைந்திருப்பது போல்*
*தனிமையெனும்*
*ஓர் அழகிய உணர்வை*
*என் துணையென*
*உணர்ந்தேன்; அனுபவித்தேன்;*
*அதன் கைகோர்த்து தோள் சாய்ந்து*
*என் வாழ்க்கை பயணத்தை*
*தொடர்ந்தேன்;*
*தொடர்கிறேன்;*
*இனியும் தொடர்வேன்.*

**- R.T.Sherin Esther -**



# தியானம்

**- Murugiah vibushana -**

மனதின் நன்மை பயக்கும் நிலைகளை மேம்படுத்தும் ஒரு வழிமுறையே தியானமாகும். மனதின் சில நிலைகளை உருவாக்க அதுவே பழக்கமாகும் வரை திரும்பத் திரும்ப செய்கிறோம். உடல் அளவில் தியானம் என்பது புதிய நரம்பியல் பாதைகளை கட்டமைப்பாகக் காட்டுகிறது.

## தியானத்தின் பலன்கள்

தியானத்தின் மூலம் நாம் மேம்படுத்தக்கூடிய பல்வேறு விதமான பலன் தரும் மனநிலைகள் இருக்கின்றன.

- ✓ மன அழுத்தம் குறைவாக இருத்தல் அதிக நிதானத்தோடு இருத்தல்.
- ✓ குறுகிய மனமின்றி குறிக்கோளோடு இருத்தல்.
- ✓ நிலையான கவலைகள் இல்லாது அமைதியாக இருத்தல்.
- ✓ நம்முடைய மற்றும் பிறருடைய வாழ்க்கையைப் பற்றி நல்ல புரிதலைக்கொண்டிருத்தல்.
- ✓ நேர்மறை உணர்வுகளான அன்பு இரக்கம் அதிகம் கொண்டிருத்தல்.

நம்மில் பெரும்பாலானவர்கள் அமைதியான தெளிவான மகிழ்ச்சியான மனதையே விரும்புகின்றனர். நாம் மன அழுத்தத்துடனோ அல்லது எதிர்மறை நிலையிலோ இருந்தால் அது நமக்கு சோகத்தை தரும். அது நம் ஆரோக்கியத்தைக் கெடுத்து நம் பணி குடும்ப வாழ்க்கை மற்றும் நட்பை பாதிக்கும். மன அழுத்தத்திலோ முன்கோபத்தாலோ நாம் துவண்டு போனால் நாம் நமக்கு உதவும் வகையில் தியானம் போன்ற வழிகளை நாடுவோம். தியானம் உணர்வுகளின் குறைபாடுகளை கடந்து வர உதவுகிறது. இதில் எதிர்மறை பக்கவிளைவுகள் எதுவுமில்லை.

தியானத்தை நாம் யதார்த்தமான அணுகுமுறையோடு அணுக வேண்டும். இது எல்லாவற்றிற்குமான உடனடித் தீர்வல்ல. எனினும் தியானத்தை நேர்மறை முடிவுகளை பெறுவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தலாம். ஒரு சிறிய காரணத்தால் எப்போதுமே ஒரு முடிவை அடைந்து விட முடியாது. ஆனால் பல்வேறு காரணங்கள் மற்றும் நிபந்தனைகளால் இது சாத்தியம். உதாரணத்திற்கு நமக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தால் அதனை சரிசெய்ய தியானம் உதவுகிறது. ஆனால் நமது உணவு முறை மாற்றம் உடற்பயிற்சி மற்றும் மருந்துகளை உட்கொள்வதன் மூலம் வரும் முடிவுகளைப் போல் இருக்காது.

## அன்றாட வாழ்க்கைக்கான தியானம்

தியானத்தின் மொத்த புள்ளியே நம் வீட்டிலேயே மெத்தை மீது அமர்ந்து கொண்டு அமைதி கவனம் மற்றும் அன்பை உணர்தல் அல்ல நம்முடைய அன்றாட வாழ்க்கையில் உண்மையில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாம் தினசரி

தியானித்தால் அவை நேர்மறை ஒரு பழக்கமாக்கும். அதனை நாம் இரவு அல்லது பகல் என நமக்கு தேவைப்படும் சமயத்தில் செயற்படுத்தலாம். கடைசியில் அது நம்மில் ஒரு பாகமாகிவிடும். இயற்கையான ஒன்று நம்முடன் எப்போதும் இருக்கும் அதே வேளை அதிக அன்பு கவனம் மற்றும் அமைதி நிலவும்.

நாம் சில நேரங்களில் உண்மையில் கோபமோ அல்லது விரக்தியோ அடைந்த நிமிடங்கள் இருக்கும். ஆனால் நமக்கு நினைவில் வைத்திருக்க வேண்டும். “அதிக அன்பானவர்களாக இருங்கள்” ஏனெனில் இந்த மனநிலையோடு தேவையான தியான பயிற்சியும் சேர்ந்தால் நாம் பழக்கப்படுவோம். நம்மால் உடனுக்குடன் அதை உருவாக்கிக் கொள்ள முடியும். யாருமே நினைவானவர் அல்ல நாம் அனைவருமே ஏதோ ஒரு தீய பழக்கத்தைக் கண்டறிந்து அதில் இருந்து வெளியேற நினைக்கிறோம். அதிஷ்டவசமாக இந்த பழக்கங்கள் மாற்ற முடியாத கற்களில் செதுக்கியதாக இல்லாமல் மாற்றிக்கொள்ளும் வகையில் உள்ளன.

இந்த மாற்றம் தேவை தான் ஆனால் அதற்கு நம்முடைய சொந்த முயற்சியும் முக்கியம். நம்மில் பலர் பல மணி நேரத்தினை உடற்பயிற்சிக்கூடத்தில் செலவிடுகிறோம். ஆனால் நம்முடைய பெரிய சொத்தான நம் மனதிற்கான பயிற்சியை செய்ய மறந்து விடுகிறோம். தோடக்கத்தில் இது கடினம் தான். ஆனால் ஒரு முறை தியானம் நம் வாழ்வில் கொண்டு வந்திருக்கும் பலன்களைப் பார்த்து விட்டால் நமது மனதிற்காக நேரத்தை முதலீடு செய்து செயலாற்றுவதில் நாம் மகிழ்ச்சியடைவோம்.

## மானிடா

காலம் என்னும் பாதையில்
உலகம் என்னும் போர்வையில்
ஆசை என்னும் மோகத்தில்
உலாவிடும் மானிடா

உடலும் உறவும் சொந்தமில்லா நிலையில்
எத்தனையோ பேராசை மோகத்திரையில்
சுற்றி திரிந்து எதைத்தான் சாதிப்பாய்? எவற்றைத்தான்
எடுத்துச் செல்வாய் ?

பிறப்பும் இறப்பும் கட்டாய நிலையில்
சேமித்தவை எதுவும் வரப்போவதில்லை
நீ சேமித்து பாவ புண்ணியம் ஒன்றே
உன்னுடன் கூடவே வந்து சேர்ந்திடும்.

மாயை என்னும் உலகைக் கடந்து
மாயவன் உலகிற்கு கடந்து சென்றிடு
தனியாகவே வந்து தனியாகவே சென்றிடும்
பயணமதை மனமார ஏற்றிடு
மானிடப் பிறவியின் அர்த்தம் புரிந்திடு மானிடா

**- மகேந்திரராசா றுபிதா -**

# யாழ் சிட்டுக்களின் ஆசிரியையாய் ஒரு நாள்

**- AWF Shahnas -**



மாணவி எனும் நிலை கடந்து ஆசிரியை எனும் புது பெயர் கொண்ட நாள் அது.

ஆயிரம் கனவுகளுடன், கற்பனைகளும் சுமந்த என் உள்ளம் அலைகடலாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க மெல்ல காலடி வைத்தேன் பள்ளிக்கூட வளாகத்தினுள்.

புள்ளிமான்களாய் துள்ளித் திரிந்த மாணவர்கள் எம்மைக் கண்டு விழிகள் அகல புன்னகைக்க என் பயம் கலந்த மனம் சிறிது சாந்தமடைந்தது.

ஒவ்வொரு வகுப்பறையாய் நுழைந்ததும், நான் மாணவியாய் சுற்றித்திரிந்த என் பள்ளிக்கூட நினைவுகள் என் மனக்கண்முன் தோன்ற கண்கலங்கியவளாய் நின்றிருந்த என்னை தோழி ஒன்றின் கரங்கள் அசைத்து விட மீண்டேன் வகுப்பறையினுள் ஆசிரியையாய்.

யுத்த ரணம் சுமந்த பூமியின் வெடிப்பில் முளைத்த செடிகளில் மலர காத்திருக்கும் மலர்களுடன் உரையாடி, விளையாடி நம் பொழுதுகள் கடக்க, அவற்றை பொக்கிஷமாய் சேர்த்து வைத்தேன் நெஞ்சினுள்.

பிரிவு நேரம் நெருங்க பிரிய மனமின்றி வேறு வழியின்றி விடைபெற்றேன் அன்பான மாணவச் செல்வங்களிடம், மதிப்பார்ந்த நிர்வாகத்திடம், வீரமாய் வீற்றிருந்த பாடசாலையிடம்.

தற்காலிகமாய் இருந்தாலும் நிரந்தர நினைவுகளை என்னுள் விதைத்த அந்நாளை மறந்தும் கூட மறவாதே என் இதயம்

# எது செல்வம்?



யாரோ ஒருவரால் கையொப்பமிட்ட
வண்ண காகிதங்களா?
யாரோ ஒருவரால் பட்டை
தீட்டப்பட்ட வைரங்களா?
யாரோ ஒருவரால் அலங்கரிக்கப்பட்ட
தங்கங்களா? - இல்லை

அன்பு கணவனுக்கு தள்ளாடும் வயதில் கைப்பிடிக்கும்
துணையாள் செல்வம்!
பெற்றெடுத்த தாய்க்கு மழலையின்
மகிழ்ச்சி செல்வம்!
வழியில் எறியப்பட்ட நாய் குட்டிக்கு அன்பாய் அனைக்கும்
கைகள் செல்வம்!
வளர்ந்த வாலிபனுக்கு வழி காட்டும் உற்ற
நண்பன் செல்வம்!
ஆசானுக்கு ஆயிரம் கல்வி தூண்களை
உருவாக்குவது செல்வம்!
பிச்சை பாத்திரம் ஏந்தியவனுக்கு அதனை தூக்கி எரியும்
அந்த நாள் செல்வம்!
அன்பிற்காக ஏங்கும் பெண்ணிற்கு காமவதையற்ற
உறவு செல்வம்!
கவனிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கம் கொண்ட (வளர்ந்த)
குழந்தைக்கு யாரோ ஒருவரின்
பாராட்டு செல்வம்!
மரணப்படுக்கையில் மண்றாடும் மானிடனுக்கு
மரணம் செல்வம்!
போதும் இந்த வாழ்க்கை என்று எண்ணியவனுக்கு ”நான்
இருக்கிறேன்” என்ற
வார்த்தை செல்வம்!

ஆக மொத்தம் செல்வம் சடப்பொருள் அல்ல
சக்தி!

*இப்படிக்கு*
*குறிஞ்சி மகள்*
*லோ. தினுஷா பிரியதர்ஷனி*


# எமது பிறப்பு சம்பவமாகவும் இறப்பு சரித்திரமாகவும் மாற்றப்படல் வேண்டும்

- டஜானா சிவராசா -

நாம் உயிரோடு இருப்பதனால் என்ன நிகழ்ந்து விடப்போகிறது என சிந்திக்கும்போதும் நான் இத்தனைநாள் வாழ்க்கையில் என்ன சாதித்தேன் என எண்ணும் போதும் உங்களிடம் உங்களைத் திருப்திப்படுத்துமளவுக்கேனும் பதில் இருக்கின்றதென்றால் நீங்கள் சரியான வாழ்வை வாழ முயன்றிருக்கிறீர்கள் என்பது அதன் பொருள் ஆனால் நீங்கள் வாழும் வாழ்வு நிச்சயம் இந்த உலகில் உங்கள் இருப்பு அவசியம் என்றும் நான் இந்த சமூகத்தின் இன்றியமையாத அங்கமென்றும் உங்கள் மீது உங்களுக்கு எப்போது மரியாதை தோன்றுகிறதோ அன்று நீங்கள் சிறப்பான

வாழ்வை வாள ஆரம்பித்திருப்பீர்கள் சின்னதோ பெருசோ உங்கள் பங்கு இருக்கட்டும் இந்த பூமியில் உள்ள ஏதோ ஒன்றின் வளர்ச்சிக்காய்.

அது நமது வாழ்வை அர்த்தமுள்ளதாய் மாற்றும். எல்லோரும் பிறக்கின்றோம் எல்லோரும் இறக்கின்றோம். இறந்த பின்பும் நினைவு கூருமளவுக்கு சிறப்பான மனிதனாய் ஒருசிலரால்த்தான் முடிகிறது காரணம் அவன் தன்னையும் குடும்பத்தையும் தாண்டி சமுகம் மீதும் கரிசனை கொண்டிருப்பதனால் தான் உங்களை அன்னை திரேசா ஆகவோ காந்தியடிகளாகவோ மாற்றமடையச் கூறவில்லை சற்று உங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாய் மாற்ற இயன்றதைச் செய்யுங்கள் எனது இந்தப் பிறவி பிறந்தேன் வாழ்ந்தேன் இறப்பேன் என்பதற்கானதல்ல இப்பிறவி அர்த்தமற்றதோ கொண்டாடப்பட தகுதியற்றதோ அன்று ஏனெனில்சாதாரண மனிதர்கள் நாம் தயாரித்த பொருளே இந்த உலகத்தில் பாராட்டப்பட வேண்டும் கொண்டாடப்பட வேண்டும் என்று ஆசைப்படும்போது கடவுளே தயாரிச்ச பொருள் தானே நாங்க அந்தப்பொருள் தோற்றுப்போறமாதிரியோ பிரயோசனம் அற்றதாகவோ அந்த இறைவன் படைத்திருக்க மாட்டார் உனக்குள்ள ஏதோ ஒரு வெற்றி ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையுடன் தேடு உன்மேல் நம்பிக்கை வரவில்லை என்றால் எந்தப்பயனுமில்லாத அற்ப பொருளைப்படைக்குமளவுக்கு கடவுள் முட்டாள் இல்லை என்பதையேனும் நம்புங்கள் அதற்காக நீங்கள் படைக்கப்பட்ட காரணத்தை தேடியலையாதீர்கள் இதற்காக தான் என்று நீங்களே காரணங்களை உருவாக்கி வென்று பறைசாற்றுங்கள் இப்பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுங்கள்.





# சுனிதா வில்லியம்ஸ்

- பா.லக்சிகா -

***சுனிதா வில்லியம்ஸ்,*** இந்தியத் தந்தைக்கும், சுலோவெனியத் தாய்க்கும் ஒகையோவின் யூக்லிட்டில் பிறந்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையும், ஓய்வுபெற்ற ஐக்கிய அமெரிக்கக் கடற்படை அதிகாரியும் ஆவார்.

சுனிதா வில்லியம்சு ஆகத்து 1998 இல் ஜான்சன் விண்வெளி மையத்தில் தனது விண்வெளி வீரர் பயிற்சியைத் தொடங்கினார்.

14ம் விண்வெளி பயணக் குழுவில் சேர, திசம்பர் 9, 2006 அன்று டிஸ்கவரி விண்கலத்தின் மூலம் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு சுனிதா வில்லியம்சு அனுப்பப்பட்டார். 2007 ஆம் ஆண்டில், இவர் நான்கு விண்வெளி நடைப்பயணங்களில் 29 மணி 17 நிமிடங்கள் பதிவு செய்தார், இதற்கு முன்பு ஒரு பெண் விண்வெளியில் அதிக நேரம் நடந்து சென்ற கேத்ரின் சி. தோர்ன்டன் சாதனையை முறியடித்தார்.

இவர் விண்வெளியில் அதிக நேரம் பயணம் செய்த பெண் சாதனையாளர் ஆவார் (ஏழு முறை 50 மணி நேரம், 40 நிமிடங்கள்) இவர் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு 32ஆம் விண்வெளிப் பயணத்தில் விமான பொறியாளராகவும், பின்னர் 33ஆம் விண்வெளிப் பயணத்தில் தலைவராகவும் பணியாற்றினார். 2024 ஆம் ஆண்டில், போயிங் இசுடார்லைனர் மூலம் அனைத்துலக விண்வெளி நிலையம் சென்ற இவரது முதல் பணிக்குழுவில் சென்றார். சுனிதாவும் சக விண்வெளி வீரர் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் அனைத்துலக விண்வெளி நிலையத்தில் பல்வேறு அறிவியல் சோதனைகள், பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் பூமிக்குத் திரும்பும் காலம் நெருங்கினாலும், தொழில்நுட்பக் காரணங்களால் திரும்பி வருவது தாமதமானது, நிறைவாக மார்ச் 18, 2025 அன்று பூமிக்குத் திரும்பினார்.

# கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it





☞ Click Here for Watch it

நன்றி : DAN தமிழ் ஒளி

# பேசும் படங்கள்



**சந்திரசேகரம் டிலெக்ஷன்**
இந்துசமயப்பிரிவு
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Art by. M.J.F. Nasma

# குருசேத்திரம்

කුරුසේත්තිරම් Guruseththiram

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...**

**"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

- சிறுகதை
- தொடர்கதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியங்கள்

**தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.**

**சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.**

**சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)**

## குருசேத்திரம் உங்களின் களம்...

**அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

gurusethththiram@gmail.com

www.guruseththiram.blogspot.com Click Here

– குருசேத்திரம் குழுமம் –